**கவனிக்க**.- *06.10.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2041 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13**

*2041 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1758* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1768* |


**கவனிக்க**.- (i) *உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1755 - B81215 - 5,403 (2017/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிருபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

**நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **இயலுமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை**.- இப்பரீட்சை, 2017, நவெம்பர் மாதம் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான சேவைப் பிரமாணத்திற்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற பரீட்சைச் சபையின் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற இயலுமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய இந்தப் பதவியின் பொருட்டு விண்ணப்பதாரர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர் ;

(ii) இப்பதவி நிரந்தரமானது ;

**குறிப்பு**.- ஓய்வூதியத் திட்டமுறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு அமையவாகும்.

(iii) திறந்த ஆட்சேர்ப்பு முறையின்கீழ் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். III ஆம் தரத்திற்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து 3 வருடங்களைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பது கட்டாயமாகும்.

(iv) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை சேவையில் சேர்ந்து 05 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபனவிதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்** :

I - சம்பளக் குறியீட்டு இலக்கம் : SL-I-2006
II - சம்பள அளவுத்திட்டம் : ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895

தரங்களின் அடிப்படையில் ஆரம்ப சம்பளப் படிநிலை :

| தரம் | ஆரம்ப சம்பளப் படிநிலை | ஆரம்ப சம்பள நிலை |
|---|---|---|
| I | படிநிலை 01 | ரூபா 47,615 |
| II | படிநிலை 12 | ரூபா 62,595 |
| III | படிநிலை 20 | ரூபா 76,175 |

5. **வயதெல்லை :**

ஆகக்குறைந்தது : 21 வயதிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
ஆகக்கூடியது : 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் சட்டம் தொடர்பான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்/அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

**அனுபவம்.**- உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவர் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், சட்டத்தரணியாக 3 வருடங்களுக்குக் குறையாத தொழில் ரீதியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**உடற்தகைமை.**- சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய வகையில் உடல் மற்றும் உள தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பத்தினைக் கோரும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்தன்று பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) இயலுமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன் அங்கு பெற்றுக்கொள்ளப்படுகின்ற மொத்தப் புள்ளிகளின் திறமை பட்டியல் அமைப்பில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) ***இயலுமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :***

| | | | உச்சப் புள்ளி |
|---|---|---|---|
| 01 | **மேலதிகக் கல்வித் தகைமைகள்** | | 20 |
| | பட்டப் பின்படிப்பு பட்டம் | 20 | |
| | பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி | 15 | |
| உச்ச தகைமையின் பொருட்டு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். (சட்டத்தினாலான பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு தகைமைகள் பொருட்டு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) | | | |
| 02 | **மேலதிக தொழிற் தகைமைகள்** | | 15 |
| | சட்டத்துறைக்கு உரிய வேறு தொழில்களில் ஈடுபட்டிருத்தல் (3 வருடத்திற்கு மேல்) | 15 | |
| | சட்டத்துறைக்கு உரிய வேறு தொழில்களில் ஈடுபட்டிருத்தல் (2-3 வருடங்கள்) | 10 | |
| | சட்டத்துறைக்கு உரிய வேறு தொழில்களில் ஈடுபட்டிருத்தல் (2 வருடத்திற்குக் குறைவு) | 05 | |

| | | | உச்சப் புள்ளி |
|---|---|---|---|
| 03 | **மேலதிக அனுபவம்** | | 30 |
| | சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையிலான அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகளாக 30 (அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் சட்டத்தரணியொருவராகச் செயற்பட்ட 3 வருட சேவைக்காலம் தவிர்த்து) | 30 | |
| | (அனுபவங்களை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.) | | |
| 04 | **ஆங்கில மொழித் தேர்ச்சி** | | 15 |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 01 ஆண்டு அல்லது அதற்கு மேல் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு | 15 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 01 வருடத்திற்குக் குறைந்த 06 மாதத்திற்குக் கூடிய ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 06 மாதத்திற்குக் குறையாத ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு | 05 | |
| 05 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்று தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தினைப் பிரதான பாடமொன்றாகக் கற்றிருப்பது தொடர்பாக | 15 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 01 வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறியின் பொருட்டு | 10 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறியின் பொருட்டு | 05 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறியின் பொருட்டு | 03 | |
| 06 | **நேர்முகப் பரீட்சையின்போது காட்டப்படும் திறமை** | | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

8. ***விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.-*** அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும் மற்றும் இணையத்தளத்திலும் விண்ணப்பங்கள் கோரப்படும். இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி

விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2017.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** :

(i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ; தபாலிடுகையின் போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களில் நிழற்படப்பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

***பிழையான தகவல்களை வழங்குதல்***.- இப்பதவிக்கு நியமனம் பெறும் பொருட்டு விண்ணப்பக்காரர் எவரேனும் ஒருவர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பதவிக்கு நியமனம் செய்வதற்கு முன்னர் அல்லது பதவிக்கு நியமனம் செய்ததன் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமையினை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானப் பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனைகள் மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

10. இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடு காணப்படுமிடத்து சிங்கள மொழி மூலமே ஏற்புடையதாக அமையும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

டாக்டர் ஆர். எம். ஆரியதாச,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2017, செத்தெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

***நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவி***

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : | |
|---|---|

*சிங்களம் 1* (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)
*தமிழ் 2*

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(உதாரணம் : SILVA, B. A.)

1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.

1.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(பழைய தேசிய ஆள் அடையாள இலக்கத்தைக் குறிப்பிடுகையில் கடைசியாகவுள்ள இரு கூடுகளையும் வெற்றிடமாக வைக்கவும்.)

2. 2.1 முகவரி :

(அ) தனிப்பட்ட :----.

(ஆ) அலுவலக :----.

2.2 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 குடியியல் நிலை :

| | |
|---|---|
| விவாகமானவர் | |
| விவாகமாகாதவர் | |

(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

4. கல்வித் தகைமைகள் :

4.1 சட்டம் தொடர்பான பட்டத்தைப் பெற்ற நிறுவனம் :----.

4.2 சட்டம் தொடர்பான பட்டத்தைப் பெற்ற திகதி :----.

4.3 உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் தொடர்பாக :----.

4.4 சத்தியப்பிரமாணம் செய்திருப்பின் அது எந்தத் திகதியில் இருந்து :----.

5. அனுபவம் :

5.1 மூன்று (03) ஆண்டுகள் தொடராக தொழில் அனுபவத்தைப் பெற்றுள்ள நிறுவனம் :----.

(உறுதிப்படுத்துவதன் பொருட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

6. தற்போதைய தொழில் மற்றும் முன்னர் வகித்த பதவி (இருப்பின் மாத்திரம்) :----.

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

7. இவ்விண்ணப்பத்தில் தன்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :

இத்திணைக்களத்தின் ........................................................ ஆக கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..................... ................ என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர்
(அலுவலக முத்திரையைப் பதிக்கவும்).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

10-336

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் பயிலுநர் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் உடைய ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தரக் கடற்படையில் இணைவதற்குப் பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(அ) ***குடியுரிமை.***- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) ***வயது.***- 2017.11.08 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) ***உயரம்.***- 5 அடி 5 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஈ) ***நிறை.***- 47 கிலோ கிராமிற்கு (105 இறாத்தல்) குறையாதிருத்தல் வேண்டும் ;

(உ) ***மார்பு.***- 32 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஊ) ***பார்வை வர்ணப்பதிவு மட்டம்.***- எஸ்டீடி II ;

(எ) ***தொலைப்பார்வை.***- இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் கண்ணாடி வில்லை இன்றி) ;

(ஏ) ***குடியியல் அந்தஸ்து.***- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலுநர் எவரும் பயிற்சியின்போது மற்றும் "பலநெவி" தரத்திற்குத் தகுதி பெறும் வரையில் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. **கல்வித் தகைமைகள் :**

(அ) ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட மூன்று வருட கால முழு நேர தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிக்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(1) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கடற்படை பொறியியல்)

(2) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின் பொறியியல்)

(3) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் மின் பொறியியல்)

(4) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சுய நகரும் பொறியியல்)

(5) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கப்பற்பாகம் பழுதுபார்த்தல் மற்றும் கப்பல்களின் கட்டுமானம்)

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். மேலும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் பாடங்களுக்காக சாதாரண சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

**குறிப்பு**.- க. பொ. த. (சா. த.) கல்வித் தகைமைகள் தொடர்பாக மேலதிக பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படாததுடன் விளையாட்டுத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திறமைகள் தொடர்பாக உரியவாறு கவனத்தில் கொள்ளப்படும்.

4. மேலே இரண்டாம் மற்றும் மூன்றாம் பந்திகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் வேண்டப்பட்ட அளவுகளுக்கேற்ப உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியவற்றைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருந்தும் இராணுவ சேவைக்கு பயனுள்ள விசேட திறன்கள் இருந்தால் கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்** :

(அ) விண்ணப்பதாரிகள் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன் அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளையும் கற்றல் வேண்டும் ;

(ஆ) பயிற்சிபெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் பயிலுநர்கள் கடற்படைச் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும் ;

(இ) அனைத்துப் பயிலுநர்களுக்கும் சகல சின்னங்களுடனான சீருடை உபகரணங்கள் என்பன வழங்கப்படும் ;

(ஈ) பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு கடற்படையிடமிருந்து வழங்கப்படும் ;

(உ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் எவரேனும் ஒரு பயிலுநருக்கு தமது பயிலுநர் நன்மையை தமது சுய விருப்பில் இடைநிறுத்துவதற்குத் தேவைப்பட்டால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் பயிலுநருக்காக அதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துச் செலவினங்களையும் குறித்த பயிலுநரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீள செலுத்துதல் வேண்டும் ;

(ஊ) பயிற்சி பெறுகின்ற கால எல்லையினுள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு பயிலுநரின் துர்நடத்தை மீது அல்லது அவர் பொறுப்புக் கூறவேண்டிய ஏதேனுமொரு காரணத்தின் மீது அவர் கடற்படைச் சேவைக்கு உகந்தவரல்ல எனப் பொறுப்பானவர் ஒருவரினால் தீர்மானிக்கப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுநரினால் அவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு இணங்குவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவராக கடற்படைத் தளபதியுடன் பிணையொன்றிற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) எல்லா கடற்படையினரும் இலங்கையின் எப்பாகத்திலும் அல்லது வெளிநாடொன்றிற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படும் நியதிக்கு உள்ளாவர்.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் மொழிக் கொள்கையினைச் செயற்படுத்தும் பொருட்டு இதன் பின்னர் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் சட்டவிதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 03/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இதற்கமைய-

(அ) அடிப்படைச் சம்பளம் ரூபா 20,798 ;

(ஆ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(இ) சீருடை பேணுதல் கொடுப்பனவு ரூபா 170 ;

(ஈ) கஷ்டக் கொடுப்பனவுகள் (யுத்தப் பிரதேசங்களில்) ஆரம்ப பயிற்சியின் பின் ;

(உ) கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தமற்ற பிரதேசங்களில்) அடிப்படைப் பயிற்சியின் பின் ;

(ஊ) ஏனைய கொடுப்பனவுகள் : - விசேட கொடுப்பனவு ரூபா 1,000 ;
- விசேட மேலதிகக் கொடுப்பனவு ரூபா 2,400 ;

(எ) தனிப்பயன் கொடுப்பனவு ரூபா 9,822 இற்கு ;

(ஏ) குறைந்தபட்ச மொத்தச் சம்பளம் ரூபா 38,876.

**குறிப்பு**.- கடற்படை வீரர்களின் அடிப்படைச் சம்பளம் 2020.01.01 ஆந் திகதி ரூபா 30,140 என்பதோடு பின்வருமாறு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் :

2016.01.01 - 176 X 5 - 210 X 19
2020.01.01 - 300 X 5 - 370 X 19

(ஐ) இலவசமாகப் புகையிரதத்தில் பிரயாணம் செய்யக்கூடிய மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டு ஆண்டொன்றுக்கு (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்) உரித்தாகும் ;

(ஒ) முகாமில் வசிக்கும் கடற்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை அலுவலர் விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் கட்டண செலவினம் செலுத்தப்படும் ;

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும் (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்) ;

(ஔ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடற்படை வீரர்களுக்கு மாதாந்தம் ரூபா 1,600 தொடக்கம் 4,250 வரையிலான வீட்டு வாடகைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(க) திருமணமான கடற்படை வீரர்களுக்காக விவாகமானவர்களின் விடுதிகளில் வெற்றிடங்களின் அடிப்படையில் விடுதிகள் வழங்கப்படும். இதற்காக அரச சேவையினருக்கு உரியவாறு வீட்டு வாடகை அறவிடப்படும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்திற்கேற்ப விண்ணப்பத்தின் அனைத்து விபரங்களுடன் மற்றும் தெளிவாக தமது கையெழுத்தால் பூரணப்படுத்தப்படல் வேண்டும் ;

விண்ணப்பங்கள் 2017.11.08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படை தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுநர் கடற்படைத் தொழில்நுட்பவியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறித்தல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மற்றும் நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவல்களை www.navy.lk இணையத்தின் ஊடாக அல்லது 0112215162 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ சிவில் நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கலாம் என்ற சான்றிதழுடன் திணைக்களத்தின்/சபையின்/சிவில் நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டால் விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்திருக்கும் பிரிவுகளுடன் தொடர்பான கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ் ;

(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ் ;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப அல்லது அனுபவமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றுப்பத்திரங்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் இறுதியாகத் தாம் கல்வி கற்ற பாடசாலை அதிபரினாலும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரரைப் பற்றி அறிந்த பொறுப்பான ஒரு நபரிடமிருந்து அல்லது தற்போதைய சேவை வழங்குநரிடமிருந்து (தற்போது சேவையில் ஈடுபட்டிருந்தால்) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(7) விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்.

(ஈ) உரிய சந்தர்ப்பங்களில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட மாட்டாது ;

(உ) வேறு ஆவணங்கள் அல்லது மூலப்பிரதிகள் எவையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது ;

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டு குறித்த சான்றிதழ்கள் காணாமற்போகும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக கடற்படை பொறுப்புக்கூறாது.

9. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களை வழங்குதல், குறித்த பொய்யான தகவல்கள் தொடர்பாக விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரியவந்தால் அவரின் பயிலுநர் தன்மையை இரத்துச்செய்வதற்கும், தெரிவுசெய்யப்பட்டதன் பின் தெரியவந்தால் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் உட்படுதல் வேண்டும்.

10. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப் பரீட்சை முதலியன :**

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கைக் கடற்படையினரால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ்க்குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு தெரிவு சபை ஒன்றின் முன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| உடற்பயிற்சி | காலம் (நிமிடம்/ செக்கன்) | தடவைகள் |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 07 நிமிடம் 30 வினாடி | - |
| Push up | 02 நிமிடம் | 20 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Sit up | 02 நிமிடம் | 15 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Arm Bending | 02 நிமிடம் | 07 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பிரயாணச் செலவுகள் அல்லது வேறு எவ்வித செலவுகளும் செலுத்தப்பட மாட்டாது ;

(இ) இப்பதவிக்காக விண்ணப்பதாரர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குப் பின் தகுதியானவர்களான விண்ணப்பதாரிகள் கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளித்தல் வேண்டும் ;

(உ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது அவருக்குச் சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எவ்விதத்திலேனும் உந்துதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும் ;

(ஊ) ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது விடயமாக அறிவிக்கப்பட மாட்டாது ;

(எ) **குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதங்களுக்கிடையில் இணக்கமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான பதம் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

ரீஜேஎல் சின்னய்யா, டப்டப்வீ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ**,
யூஎஸ்பீ, சீடிஎப், என்டியூ, பீஎஸ்சீ ;
வயிஸ் அத்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு.

10-373

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

*பல்கலைக்கழக முறைமையில் உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை - 2017*

### வெளிவாரிப் பிரிவு

உதவிச் செயலாளர் /உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர்/உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.பரீட்சை கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

1. 'தலைவர்'என்ற பதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரைக் குறிக்கும்.

2. உதவிச் செயலாளர் /உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூலப் பரீட்சையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.11.13 ஆகும். குறிப்பிட்ட எழுத்துமூலப் பரீட்சையை 2018 சனவரி மாதத்தில் நடாத்துவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

5. எழுத்து மூலப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பற்றிய விபரம் பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

6. எழுத்து மூலப் பரீட்சைப் பெறுபேறுகளை விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட வகையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**குறிப்பு :**

- விண்ணப்பம் அல்லது அதனுடன் தொடர்பான வேறு எந்தவொரு ஆவணமோ தபாலில் தொலைந்துவிடல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்த விதமான முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள் :**

***ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன் நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள் -உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர் பதவி :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து முதல் தர அல்லது இரண்டாம் தர சித்தியுடன்கூடிய ஆரம்ப (இளமாணி) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) ஆரம்ப (இளமாணி) பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து நிர்வாகம்/ முகாமைத்துவம்** சம்பந்தமான முதுமாணிப் பட்டம்/ பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது**.- இருபத்து இரண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (1995.11.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.11.13 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்)

**

- அரச / வணிக நிர்வாகம்
- முகாமைத்துவம்
- அரச கொள்கைகள்
- மனித வளங்கள் முகாமைத்துவம்
- பொருளியல்
- சட்டம்
- நிதி முகாமைத்துவம்
- கருத் திட்டங்களை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்
- தகவல் தொழில்நுட்பம் அல்லது
- முகாமைத்துவம் / நிர்வாகம் போன்ற பகுதிகளை குறிப்பிடத்தக்களவில் கொண்ட வேறு எந்தவொரு பாடத் துறையொன்று.

**தகைமைகள்.- உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர் :**

(1) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின்/இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

(2) (அ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து கணக்கியல் தொடர்பான விசேட ஆரம்ப (இளமாணி) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து ஆரம்ப (இளமாணி) பட்டத்துடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலை மட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் அல்லது அதன் முன்னோடி நிறுவகமொன்றில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) அரச/ அரச கூட்டுத்தாபனம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்காய்வு சம்பந்தமாக இரண்டு (02) வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயது**.- இருபத்து இரண்டு (22) வயதுக்குக் குறையாமலும் முப்பது (30) வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (1995.11.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.11.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுகின்றார்கள்)

**தகைமைகள் பற்றிய வரையறைகள் :**

(1) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய வெளிவாரிப் பிரிவின் கீழ் அல்லது உள்வாரிப் பிரிவின் கீழ் இரண்டு (02) தடவைக்கு மேல் குறிப்பிட்ட பதவிக்கு தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. (2016.12.31 ஆந் திகதிக்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது).

(2) எவரேனுமொரு உள்வாரி விண்ணப்பதாரியொருவர் ஏதேனுமொரு பதவிக்காக (உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர் மற்றும் உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ) வெளிவாரி மற்றும் உள்வாரி போன்ற இரண்டு பிரிவுகளுக்கும் தகைமை பெறுவாராயின் அவர் உள்வாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் மற்றும் வெளிவாரி அடிப்படையின் கீழ் இரண்டு (02) தடவைகள் என நான்கு (04) தடவைகள் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவார். (2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றிய தடவைகள் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட மாட்டாது).

(3) தேவையான அனைத்துத் தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(4) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த மதப்போதகருக்கும் ஆட்சேர்ப்புக்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(1) ஒவ்வொரு பிரிவின் கீழான சகல விண்ணப்பதாரிகளும் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் குறிப்பிட்ட பிரிவுக்கான பாடப் பரப்புக்குட்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

| பதவி | பாடப் பரப்பு | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| உதவிச் செயலாளர் /உதவிப் பதிவாளர் | 1. நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 100 | 40 |
| | 2. முகாமைத்துவத் திறன்கள் | 100 | 40 |
| | 3. ஆங்கில மொழி | 100 | 40 |
| உதவிக் கணக்காளர்/உதவி நிதிப் பொறுப்பாளர் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 1. நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 100 | 40 |
| | 3. ஆங்கில மொழி | 100 | 40 |
| | 4. கணக்கியல் மற்றும் நிதி | 100 | 40 |

(2) எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிரூபிப்பதற்குத் தேவையான எழுத்து மூலமான ஆவணங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்படுவதன் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அனைத்து தகைமைகளையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியாகும்போது பெற்றிருத்தல் வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரி வழங்கப்பட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலமான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்குத் தவறும் பட்சத்தில் அவர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைதல் நியமனத்திற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது.

(3) எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் மேலே (2)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(4) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது 100 புள்ளிகளில் 40% அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நியமனம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவதற்கான தகைமையைப் பெறுவார்கள்.

(5) எழுத்து மூலப் பரீட்சையில் 75% மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 25% புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய வெளிவாரி மற்றும் உள்வாரி பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றினைஅடிப்படையாகக் கொண்டு திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

**பரீட்சை நடாத்தப்படும் மொழி மூலம் :**

(1) பரீட்சை மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்).

(2) விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி வினாத்தாள் தவிர ஏனைய அனைத்து வினாத்தாள்களுக்கும் விண்ணப்பப்பத்திரத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.

(3) எக்காரணத்தினைக்கொண்டும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(1) மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தரவுப் பத்திரத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், வெளிவாரி விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 08 வரையிலான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும், மீதி 03 மற்றும் 04 ஆம் பக்கங்களில் உள்ளடக்கப்படும் வகையில் விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். அனைத்து விண்ணப்பப்படிவங்களும் உரிய படிவத்திற்கமைய **ஆங்கில மொழியில்** மாத்திரம் தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.அத்துடன் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்துடன் இயைந்து செல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப் பத்திரங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதனால் விண்ணப்பப்பத்திரத்தை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இயைந்துள்ளதா எனவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அது பற்றிய விபரம் விண்ணப்பப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு அடிச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். அத்துடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான அடிச் சீட்டின் பிரதியை வைத்துக்கொள்வது பிரயோசனமாக இருக்கும்.

(2) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல பதவிகளையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ***விண்ணப்பப்பத்திரம் தொடர்பான அலுவல்களுக்கான கட்டணம்.-*** ஒவ்வொரு பிரிவின் கீழான பதவிகளுக்கான (அதாவது, உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர், உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர்) விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். இந்தக் கட்டணத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பணமாகச் செலுத்துவதற்காக வங்கிப் பண வைப்புச் சீட்டைப் பூர்த்தி செய்வதன் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயரில் இலங்கை வங்கியின் டொரின்டன் கிளையில் பேணி வரப்படும் கணக்கு இலக்கம்: 2323287 இற்கு வரவு வைக்கப்படும் வகையில் செலுத்தப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவாறு பணம் செலுத்தப்படும் வங்கியின் உத்தியோகபூர்வ முத்திரை பதிக்கப்பட்டு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்ட பண வைப்புச் சீட்டின் அடிச்சீட்டினை (counterfoil) விண்ணப்பப்படிவத்துடன் அனுப்புதல் வேண்டும். இந்தக் கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அதனை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டுதலும் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாதெனவும் எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது. பண வைப்பு அடிச்சீட்டின் (counterfoil) பிரதியொன்றை வைத்துக்கொள்ளுமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. பண வைப்புச் சீட்டின் அடிச்சீட்டு (counterfoil) இன்றி அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

எவரேனுமொரு விண்ணப்பதாரி வெளிவாரிப் பிரிவின் கீழ் நிர்வாகம் சார்ந்த (உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர்) மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த (உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர்/ உதவி உள்ளகக் கணக்காய்வாளர்) போன்ற இரண்டு வகையான பதவிகளுக்குமான பரீட்சைக்கு தோற்றுவதற்கு கருதுவாராயின் அவர் பரீட்சைக் கட்டணமாக ரூபா 2,000 செலுத்துதல் வேண்டும்.

(4) விண்ணப்பப்படிவங்களை 2017.11.06 ஆந் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தை www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திற்குப் பிரவேசித்து பதிவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்.

(5) தரவுப் பத்திரம் உள்ளிட்ட விண்ணப்பப்படிவத்தின் அனைத்துக் கூடுகளையும் பூரணப்படுத்தி உரிய இடங்களில் கையொப்பத்தை இடல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தை குறிப்பிடுதல் அத்தியாவசியமாகும்.

(7) விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதிலும் அதிகமான வருடாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(8) உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2017.11.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இலக்கம் 1503,
கொழும்பு.

(9) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில், அரசாங்கத் திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் பணி புரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(10) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறைந்தது தகுதிகாண் காலத்தினுள் அவர் இணைத்துக்கொள்ளப்படும் உயர் கல்வி நிறுவகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் பணியாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

(11) விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள்/ பூரணமற்ற விண்ணப்பங்கள்/ மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுடன் இயைந்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பரீட்சைக்குத் தோற்றுதல்:**

(1) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முடிவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பப்பத்திரம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான அடிச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை அனுப்புவார். அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடனேயே பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றி செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் தமக்குரிய அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணபதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவிடம் வினவுதல் வேண்டும்.அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்ற விபரங்களை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் பெக்ஸ் (Fax) இலக்கமொன்றைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் (Fax) இலக்கத்திற்கு அனுப்புதல் பயன்மிக்கதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வேண்டப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதி செய்துகொள்வதற்காக தம்மிடம் வைத்துக்கொள்ளும் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய அடிச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்பத்திரத்தைப் பதிவுத் தபாலில் இடும்போது வழங்கப்பட்ட பற்றுச் சீட்டை தயாராக வைத்துக்கொள்ளுதல் பயன்மிக்கதாக இருக்கும்.

(2) விண்ணப்பதாரிகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சையின் ஆரம்ப தினத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் பரீட்சை சட்ட ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும். அந்த சட்ட ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமையைப் பூர்த்திசெய்ததாகக் கருதப்பட மாட்டாது.

**எழுத்து மூலப் பரீட்சைக்கான பாட விதானம் மற்றும் வினாத்தாள் :**

**உதவிச் செயலாளர்/ உதவிப் பதிவாளர் பதவி :**

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *விபரம்* |
|---|---|---|
| வினாப்பத்திரம் 01<br>பொது நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 1½ மணித்தியாலம் | விண்ணப்பதாரிகளின் தர்க்க ரீதியிலான புரிந்துணர்வு மற்றும் பகுப்பாய்வுத் திறன் மற்றும் அனுமானிக்கும் (ஊகிக்கும்)ஆற்றல் சம்பந்தமாக மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வினாப் பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| வினாப்பத்திரம் 02<br>முகாமைத்துவத் திறன்கள் | 03 மணித்தியாலம் | கீழ்க்குறிப்பிடும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு நிலை பரிசோதிக்கப்படும்.<br>• முகாமைத்துவம் என்ற சிந்தனையின் வளர்ச்சிப்போக்கு (பரிணாமம்)<br>• முகாமைத்துவத்தின் அலுவல்கள் (திட்டமிடல், ஒழுங்கு படுத்தல், பதவிப்படுத்தல், இயக்குதல், ஊக்குவித்தல், தொடர்பாடல், கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடு செய்தல் என்ற ரீதியில்)<br>• முகாமைத்துவத்தின் அண்மைக்கால வளர்ச்சி<br>• முகாமைத்துவ நுட்பங்கள் |
| வினாப்பத்திரம் 03<br>ஆங்கில மொழி | 1½ மணித்தியாலம் | கீழ்க்குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்பதாரி களின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம்/மெமோ(MEMO)/குறிப்பெழுதும் ஆற்றல்<br>• சிங்களம்/ தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |

**உதவிக் கணக்காளர்/ உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள் :**

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *விபரம்* |
|---|---|---|
| வினாப்பத்திரம் 01<br>நுண்ணறிவு மற்றும் நியாயவாதம் (தர்க்கவியல்) | 1½ மணித்தியாலம் | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியிலான புரிந்துணர்வு, பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் அனுமானிக்கும் (ஊகிக்கும்) ஆற்றல் சம்பந்தமாக மதிப்பீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். |
| வினாப்பத்திரம் 03<br>ஆங்கில மொழி | 1½ மணித்தியாலம் | கீழ்க்குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக மற்றும் விண்ணப்பதாரி களின் இலக்கணம் மற்றும் முன்வைக்கும் ஆற்றல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• கிரகித்தல்<br>• கடிதம்/மெமோ(MEMO)/குறிப்பெழுதும் ஆற்றல்<br>• சிங்களம்/ தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |

| வினாப்பத்திரம் | காலம் | விபரம் |
|---|---|---|
| வினாப்பத்திரம் 04<br>கணக்கியல் மற்றும் நிதி | 03 மணித்தியாலம் | கீழ்க்குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவு பரீட்சிக்கப்படும்.<br>• இறுதிக் கணக்கைத் தயாரித்தல்<br>• வங்கிக் கணக்கிணக்கக் கூற்று<br>• இருப்புக்கள் பற்றிய மெய்மையாய்வு<br>• கொள்வனவு(பெறுகை) நடைமுறை<br>• காசுப் பாய்ச்சல் கூற்று<br>• கணக்காய்வுச் செயற்பாடுகள் |

**விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் பரீட்சை மேற்பார்வையாளர் வேண்டிநிற்கும் சந்தர்ப்பத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக அவரிடம் தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களையே வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதாவது பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பதாரியொருவரின் தகுதியின்மை தெரிய வந்தால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு விடயம் பொய்யானதென அறிந்திருந்தும் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவரும் பட்சத்தில் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்து வைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் பல்கலைக்கழக முறைமைச் சேவையிலிருந்து அந்த நபர் நீக்கப்படுவார்.

**மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- 2016.12.05 ஆம் திகதிய 17/2016ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவி 2020.01.01 ஆந் திகதியன்று மாதாந்தம் U-EX 1 (II), ரூபா 49,860 - 3 x 1,125 – ரூபா 53,235(EB) 54475 ; 12 x 1240 – ரூபா 69,355 எனும் ஒன்றிணைந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டிருக்கும். எவ்வாறாயினும் நியமனம் பெறுபவர்களுக்கு, தமக்குரிய பதவியை பொறுப்பேற்கும் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலையில் சம்பளம் செலுத்தப்படும்.

இது தவிர அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள படிகள் செலுத்தப்படும்.

**பணிக்கொடை.**- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பணிக்கொடை செலுத்தப்படும்.

**சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய அனுகூலங்கள்.**- ஊழியரால் சம்பளத்தின் 10% இற்குச் சமமான தொகையும், தொழில் வழங்குநரால் சம்பளத்தின் 15% இற்குச் சமமான தொகையும்வரவு வைக்கப்படுவதுடன், அதில் (8%) இனை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும், 7% இனைப் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் தொழில் வழங்குநரால் வரவு வைக்கப்படும்.

**ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அனுகூலங்கள்.**- தொழில்வழங்குநரால் சம்பளத்தின் 3% இற்குச் சமமான தொகை வரவு வைக்கப்படும்.

**அறிவித்தலை பிரசுரித்தல்.**- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் ஏதேனும் ஒவ்வாமைகள் இருப்பதாக உணரப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

For External Candidates

University Grants Commission

DATA SHEET FOR DEPARTMENT OF EXAMINATION

(for UGC purposes) (For DOE Purposes)

**POST APPLIED (Please enter the Category No.)**

**Category 01 - Assistant Secretary/Assistant Registrar (External) ..........................**

**Category 02 - Assistant Secretary/Assistant Registrar (Internal) ..........................**

**Category 03 - Asst. Accountant/Asst. Bursar/Asst. Internal Auditor (External)**

**Category 04 - Asst. Accountant/Asst. Bursar/Asst. Internal Auditor (Internal)**

**MEDIUM IN WHICH YOU WISH TO SIT THE EXAM -** Please enter the relevant No.

**Sinhala = 2, Tamil = 3, English = 4** ☐

**01.** (*a*) **Name with Initials :———————.**
(*b*) **Names denoted by Initials :———————.**

**02.** (*a*) **Postal Address :———————.**
(Any change should be communicated immediately)
(*b*) **Contact Telephone No./s :———————.**
(*c*) **E-mail :———————.**

**03. National Identity Card No. :** | | | | | | | | | | | | |

**04. Gender :** **(Male = 0, Female = 1)** ☐
(Please enter the relevant No.)

**05.** (*a*) **Date of Brith** :———————.
(*b*) **Age as at the closing date of applications** :———————.

**06. Whether Citizen of Sri Lanka** : (State whether by decent or by registration. If by registration, give reference number and date of certificate of citizenship) :———————.

———————,
**Signature of the Candidate**.

**Date** :———————.

## University Grants Commission

### FORM OF APPLICATION FOR EXTERNAL CANDIDATES

**POST** :

(Indicate the name of the post as given in the advertisement)

**01.** (*a*) **Name with Initials** :————————.
(*b*) **Names denoted by Initials** :————————.

**02. Whether Mr./Mrs./Miss** :————————.

**03.** (*a*) **Postal Address** :————————.
(Any change should be communicated immediately)
(*b*) **Contact Telephone No.** :————————.
(*c*) **E-mail Address** :————————.

**04. National Identity Card No. :** | | | | | | | | | | | | |

**05. Gender** :————————.

**06.** (*a*) **Date of Brith** :————————.
(*b*) **Age as at the closing date of applications** :————————.

**07. Whether Citizen of Sri Lanka** : (State whether by decent or by registration. If by registration, give reference number and date of certificate of citizenship) :————————.

**08. Race** :————————.
(State whether Sinhala, Tamil, person of Indian Origin or Muslim)

**09. Qualifications -**

**(*a*) University Education:**

| *Degrees/Diplomas* | *Class* | *University* | *Date of Commencement* | *Effective Date* | *Duration* |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |

**(*b*) Postgraduate Qualifications:**

| *Postgraduate Degree/Diploma* | *University* | *By Course or By Research* | *Date of Commencement* | *Effective Date* | *Duration (Prescribed period of Study)* |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |

**(*c*) Professional Qualifications:**

| *Institution* | *Qualification Obtained* | *Date of Commencement* | *Effective Date* | *Duration* |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

**10. Highest examination passed in Sinhala/Tamil :**

**11. (*a*) Present Occupation :**

**1. Post :——————.**

**2. Date of appointment to such post :——————.**

**3. Whether confirmed in the present post :——————.**

**4. Place of work with the Address :——————.**

**——————.**

**5. Salary Scale of the post :——————.**

**6. Present Salary (*a*) Basic Salary :——————.**

**(*b*) Allowances :——————.**

**(*b*) Previous appointments if any, with dates**

| ***Department/Institution*** | ***Post*** | ***Salary Scale*** | ***From*** | ***To*** |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

**12. (*a*) Period of experience gained as at the closing date of Applications relevant to the post applied :————.**

**(*b*) If you have obtained no-pay leave during this period, state reasons and the period of such leave :————.**

**13. (Names of two non-related referees with addresses and contact numbers)**

| Name | | Address |
|---|---|---|
| **1.** …………………………………. | | ………………………………. |
| | | ………………………………. |
| | | ………………………………. |
| | | ………………………………. |
| | **Contact No.:** | …………………………….... |
| | **Email Address:** | ………………………………. |
| **2.** …………………………………. | | ……………………………….. |
| | | ……………………………….. |
| | | ……………………………….. |
| | | ……………………………….. |
| | **Contact No.:** | ……………………………..... |
| | **Email Address:** | ………………………………. |

**14. Paste the counterfoil of the bank deposit slip properly here.**

**(i)** Examination Fee paid Rs. :———————.
**(ii)** Paying Bank (Branch) :———————.
**(iii)** Paying Date :———————.

(Paste the counterfoil of the bank deposit slip here securely)
(It would be advisable to keep a photocopy of the counterfoil of the bank deposit slip with the candidate)

**Category 01** - Assistant Secretary/Assistant Registrar (**External**) ............................. Rs. 1,000
**Category 03** - Asst. Accountant/Ass. Bursar/Asst. Internal Auditor (**External**) ............Rs. 1,000

**I do hereby certify that particulars submitted by me in this application are true and accurate. I am aware that if any of these particulars are found to be false or inaccurate, I am liable to be disqualified before selection even though I have successful at the written examination and to be dismissed without any compensation if the inaccuracy is detected after appointment.**

**———————,**
**Date :———————.** **Signature of the Applicant.**

**Application is recommended and forwarded.**

**—————————,**
**Signature of the Head of the Governing Body.**

**If you are currently employed it is compulsory to forward the application though the Head of the Governing Body.**

**ATTESTATION**

I hereby certify that Mr./ Mrs./ Ms. ……………………………………………………… who submits this application is known to me personally, that he/she has paid the prescribed examination fee and affixed the relevant receipt herein. He/ She placed his/ her signature in my presence on ………………………

———————,
Signature of the Officer attesting the Signature.

Date :———————.
**Name in full of the Officer Attesting the Signature** :———————.
**Designation** :———————.
**Address** :———————.
(*Official Stamp*)

10–384

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.